Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
|---|---|
| | |

**Pearson Edexcel International GCSE**

Centre Number | Candidate Number

# Thursday 21 May 2020

Morning (Time: 2 hours 30 minutes) | Paper Reference **4TA1/01**

# Tamil

## Paper 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  *– there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  *– use this as a guide as to how much time to spend on each question.*

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

*Turn over* ▶

P62014RA
©2020 Pearson Education Ltd.
1/1/1/1/1/1/
P 6 2 0 1 4 R A 0 1 2 0

Pearson

## SECTION A: READING

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**We recommend you spend no more than 1 hour on this section.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒ . If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒ . Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

**1** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி **தமிழில்** கேள்விகளுக்குரிய சரியான எழுத்தைப் பெட்டியில் இடவும்.

இரங்கோலி கலை என்பது பாரம்பரிய வரவேற்பு வடிவமாகும். மேலும் செழிப்பு, நல்ல அதிர்ஷ்டம், வெற்றியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. இது வழக்கமாக அரிசிப் பொடியைப் பயன்படுத்தி வரையப்படுகிறது. இது நவீனக் கலையாகவும் மாறுவதாகக் கருதப்படுகிறது. தமிழர்களைப் பொறுத்தவரை இது கோலம் என்று பிரபலமாக அறியப்படுகிறது. அதாவது வடிவங்கள், வளைந்த சுழல்கள், கோடுகள் மற்றும் புள்ளிகளைக் கொண்ட வரைபடத்தின் வடிவமாகும்.

பண்டையத் தமிழ்க் கலாச்சாரம், அனைத்து உயிர்களையும் நல்ல செயல்களைச் செய்வதில் அக்கறை கொண்டிருப்பதாக நம்பியது. அரிசி கோலம் பறவைகள், எறும்புகள் மற்றும் பிற சிறிய உயிரினங்களுக்கு ஓர் உணவாக அமைந்து, அவ்வுயிரினங்களை இக்கோலத்தின் மூலம் அழைப்பதால் இணக்கமான இருப்பை ஊக்குவித்தது. இக்கோல வடிவங்களை வெள்ளை அரிசிமாவுத்தூள், இரசாயனப்பொடி, வண்ண மாவுத்தூள், வண்ண மணல் மற்றும் சுண்ணாம்புத் தூள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தரையில் அவற்றை உருவாக்கலாம்.

பெண் குடும்ப உறுப்பினர்களால் பொதுவாக இக்கோலங்கள் நடைமுறையில் உள்ளன, அவர்கள் தினமும் காலையில் குறிப்பாக சிறப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகளின் போது தங்கள் வீடுகளுக்கு முன்னால் வண்ணக்கோலங்களை இடுகின்றனர்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **A** | வரவேற்பு வடிவமாகும் | **B** | பொருட்களை | **C** | கோடுகள் |
| **D** | கோலம் | **E** | வண்ணமயமான | **F** | அரிசி மாவுத்தூள் |
| **G** | நல்ல அதிர்ஷ்டம் | **H** | மாலைப்பொழுது | **I** | பெண்கள் |
| **J** | செயற்கை வண்ணங்கள் | **K** | சுண்ணாம்புத் தூள் | **L** | எறும்புகளுக்கு |
| **M** | செழிப்பு | **N** | பார்த்துகொள்வதை | **O** | காலை |

| | | |
|---|---|---|
| **உதாரணம்** | இரங்கோலி மற்றும் கோலம் ஆகியவை பாரம்பரியமாகக் கருதப்படுகின்றன வரவேற்பு வடிவம். | *A* |
| **1** (a) | … வடிவங்களை வரைவதற்கு பொடிகள் பயன்படுத்தப்படுகின்றன. | |
| **1** (b) | இந்த வடிவங்களைத் தமிழர்கள் … என்று அழைக்கிறார்கள். | |
| **1** (c) | இந்த வடிவமைப்புகள் … உணவளிக்க வரையப்பட்டுள்ளன. | |
| **1** (d) | தமிழர்கள் உயிரினங்களை … நம்புகிறார்கள். | |
| **1** (e) | … இந்த வடிவங்களை வரையும் வழக்கம் உள்ளது. | |
| **1** (f) | இந்த வடிவங்களை வரைய வெவ்வேறு … பயன்படுத்தப்படுகின்றன. | |

**(Total for Question 1 = 6 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**2** கீழே தரப்பட்டுள்ள உரையாடலை வாசித்து 8 பொருத்தமான விடைகளுக்கு ☒ குறியிடவும். சில விடைகளுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட புள்ளடிகள் இட வேண்டியிருக்கும்.

**பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியுமா?**

**மலர்:**



பணம் உங்கள் மகிழ்ச்சியை பாதிக்காது என்று நினைக்கிறேன். அது உங்கள் குடும்ப உறவுகளுடனும், செல்லப்பிராணிகளுடனும் நண்பர்களுடனும் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு வாழ்கிறீர்கள் என்பது பற்றியது. என்னிடம் நிறைய பணம் இல்லையென்றாலும் என் வாழ்க்கையில் மிகவும் திருப்தியுடன் வாழ்கிறேன். எல்லோரும் நீண்ட தூரம் செல்லக்கூடிய அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

**தங்கம்:**



மகிழ்ச்சி என்பது, பணத்தை நன்கு பயன்படுத்தத் தெரிந்த நபரைப் பொறுத்தது என்று நான் நினைக்கிறேன். ஒரு கடினமான நேரத்தில் எந்தவொரு செலவையும் கவனிக்கக் கூடுதல் பணம் தேவை படுகிறது. அச்சமயத்தில் சேமிப்பு மிகக் குறைவாக இருப்பது கவலைக்குரியது. பணம் மிகக் குறைவாக இருப்பது பாதுகாப்பற்றதாக உணர வைக்கிறது. ஆனால் சிலர் மேலும் மேலும் சேமிக்க மிகவும் பேராசையும் படுகின்றனர்.

**காவியன்:**



பணம் மகிழ்ச்சியை வாங்க முடியும் என்று நான் நம்புகிறேன். பணப் பிரச்சினைகளுடன் போராடுவது என்பது எனக்குப் பிடிப்பதில்லை. சில சமயங்களில் பணக் குறைவைப் பற்றி மற்றவர்களுடன் சில பெற்றோர்கள் புகார் செய்து பேசுவது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பணத்தைக் கொண்டு புதிய ஆடைகள் அணிந்துகொள்வதற்கும், புதிய நவீன சாதனங்களும் வாங்கி அதனை எனது நண்பர்களுக்குக் காண்பிப்பதற்கும் நான் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

| | | மலர் | தங்கம் | காவியன் |
|---|---|---|---|---|
| **உதாரணம்** | பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியாது | ☒ | ☒ | ☐ |
| **A** | கடினமான நேரங்களுக்கு சேமிப்பு முக்கியம் | ☐ | ☐ | ☐ |
| **B** | அன்பின் மதிப்பு பணத்தை விட பெரியது | ☐ | ☐ | ☐ |
| **C** | நான் என் வாழ்க்கையில் மிகவும் திருப்தி அடைகிறேன் | ☐ | ☐ | ☐ |
| **D** | பணக்குறைவு பாதுகாப்பின்மை உணர்வைத் தருகிறது | ☐ | ☐ | ☐ |
| **E** | பணக்குறைவைப் பற்றி மக்கள் ஏன் புகார் கூறுகிறார்கள் | ☐ | ☐ | ☐ |
| **F** | திருப்தியுடன் இருப்பது நீண்ட தூரம் செல்லும் | ☐ | ☐ | ☐ |
| **G** | புதிய ஆடைகளை அணிவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**3** மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றிய இக் கட்டுரையைப் படியுங்கள். தமிழில் சொற்களால் அல்லது எண்களில் பதிலளிக்கவும். சென்னை இயற்கை அழிவு.

**மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம்**

மழை நீர் இல்லாத நிலையில் பூமியில் எந்த உயிரும் இருக்க முடியாது. நாம் உண்ணும் காய்கறிகள் மற்றும் தானியங்களின் உற்பத்திக்கு இது அவசியமாகிறது.

உணவு இல்லாமல் சில நாட்கள் வாழலாம் ஆனால் குடிநீர் இல்லாமல் வாழ்வது மிகக்கடினம் என்று அறிவியல் கூறுகிறது. திருவள்ளுவர் என்ற பெரிய தமிழ்க் கவிஞர் மழை மற்றும் நீரின் சக்தியை மிகவும் சிறப்பானதாகத் தனது திருக்குறளில் வைக்கிறார். தனது முதல் அத்தியாயமான கடவுளின் வாழ்த்து அத்தியாயத்தில், தண்ணீரின் முக்கியத்துவம் மற்றும் அதன் பற்றாக்குறையின் தாக்கங்கள் பற்றி அவர் எழுதினார். இது மழை நீரின் முக்கியத்துவத்தை உணர வைக்கிறது.

இந்த நவீன உலகில் பழைய பழமொழியின் பொருள் மாறிவிட்டு, அது இப்போது "பணத்தைப் போல தண்ணீரை வீணாக்காதீர்கள்" என்று மருவும் நிலை வந்துள்ளது.

மாறிவரும் காலநிலை காரணமாக நிலத்தடி நீர் குறைக்கப்பட்டுள்ளது. எனவே இது பல அரசாங்கங்களை மழை நீர் சேகரிப்புக்கு நீர் ஆணைச் சட்டங்களின் அவசியத்தை கருத்தில் கொள்ள வைத்துள்ளது.

மழைநீரை சேகரிக்க, அதன் மீது நன்றாக மணல் மற்றும் சரளைக் கற்களைப் பரப்பி மழைநீரைச் சேகரிப்பு தொட்டி கட்டப்பட வேண்டும்.

அதிக மரங்களை நட்டு, காடுகள் அழிக்கப்படுவதைக் குறைப்பதன் மூலம் மற்றும் சரியான விழிப்புணர்வுக் கல்வி மூலமும் இதைத் தவிர்க்கமுடியும்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA



P62014RA0620

**உதாரணம்**: பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் மழை மிகவும் முக்கியமானது.

(a) .............................................................. வளர மழை நீர் அவசியம். **(1)**

(b) சில நாட்களுக்குப் பிறகு .............................................................. இல்லாமல் உயிர்வாழ்வது மிகவும் கடினம். **(1)**

(c) .............................................................. பணத்தைப் போல சேமிக்க அறிவுறுத்தப்படுகிறது. **(1)**

(d) மழை நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி .............................................................. சித்தரிக்கப்பட்டுள்ளது. **(1)**

(e) திருவள்ளுவர் மழை நீரின் .............................................................. மற்றும் அதன் .............................................................. பற்றியும் வலியுறுத்தியுள்ளார். **(2)**

(f) நிலத்தடி நீர் பற்றாக்குறைக்குக் காரணம் .............................................................. மாற்றமாகும். **(1)**

(g) மழைநீரைப் பயன்படுத்த அரசாங்கங்கள் .............................................................. உருவாக்கி வருகின்றன. **(1)**

(h) இந்த தொட்டிகளை உருவாக்கப் பயன்படும் பொருட்கள் .............................................................. மற்றும் .............................................................. ஆகும். **(2)**

(i) நீர் பற்றாக்குறையை குறைக்க .............................................................. மற்றும் .............................................................. செய்யலாம். **(2)**

**(Total for Question 3 = 12 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** பாரம்பரிய தமிழ் கிராமப்புற விளையாட்டுகளின் முக்கியத்துவம் குறித்து பின்வரும் பிரித்தெடுத்தலைப் படியுங்கள்.

**கிராமப்புற விளையாட்டுகள்**

கிள்ளி, பம்பரம், நொண்டி, ஆடு புலி ஆட்டம், நுங்கு வண்டி, பல்லாங்குழி, பச்சை குதிரை போன்றவை தமிழரின் கிராமப்புற விளையாட்டுகள் ஆகும். இவை தமிழக கிராமங்களில் விளையாடும் பிரபலமான பாரம்பரிய விளையாட்டுகளில் ஒரு சிலவாகும்.

இந்த நவீன காலத்தின் கடந்தகால விளையாட்டுகளின் பாரம்பரியத்தை மதிக்கவும், மாணவர்கள் கிராமப்புற விளையாட்டுகளால் நிரப்பப்பட்ட ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர். இது ஒரு சுலபமான காரியமல்ல, ஏனென்றால் பெரும்பாலான விளையாட்டுக்கள் எமது தாத்தா மற்றும் பாட்டி தலைமுறையைத் தாண்டி அறியப்படவில்லை.

விளையாட்டுகளைப் பற்றி அறிந்து கொள்வதிலிருந்து, அவற்றின் விதிகள், அவற்றை விளையாடும் முறை, தாயக்கட்டை, பல்லங்குழி, பம்பரம் (டாப்ஸ்) சேகரித்தல், பாரம்பரியமான ஆடைகளை அணிந்துகொள்வது, வேட்டி மற்றும் புடவை போன்ற ஆடைகளை அணிவது வரை மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்ததால் அது நடந்தேறியது.

இந்த அனுபவம் தற்போதைய தலைமுறையினரை அவர்களின் கடந்த தலைமுறையினரை உயிர்ப்பிக்கச் செய்தது மட்டுமல்லாமல், அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவும், ஆழமான புரிதலைப் பெறவும், அடுத்த தலைமுறையினருக்கு கொண்டுசெல்லவும் உதவியது. தற்போதைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டியதுடன், பெற்றோர்களையும் மற்றும் தாத்தா பாட்டிகளையும் அவர்தம் சிறு பருவ நாட்களுக்குள் மீண்டும் தங்களை அழைத்துச் சென்றதாக உணர்ந்தனர்,

மாணவர்கள் இந்த அனுபவத்தை மிகவும் ரசித்தனர், எல்லோரும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (a) கேள்விகளுக்கான பதிலை தமிழ் மொழியில் தரப்பட்ட தகவல்களிலிருந்து எழுதவும். முழு வசனத்தில் பதில் எழுத வேண்டியது இல்லை.

(i) பாரம்பரிய கிராமப்புற விளையாட்டுகளை மீண்டும் அறிமுகப்படுத்த முக்கியக் காரணத்தைக் கூறுங்கள்

**(1)**

..............................................................................................................................................

(ii) இந்த கிராமப்புற விளையாட்டுகளின் இரண்டு நன்மைகளைக் கொடுங்கள்

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(iii) மேலே உள்ள உரையிலிருந்து இரண்டு பலகை விளையாட்டுகளுக்கு பெயரிடுங்கள்

**(2)**

1 ..............................................................................................................................................

2 ..............................................................................................................................................

(iv) தற்போதைய தலைமுறையினருக்கு இந்த விளையாட்டுகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் என்ன?

**(1)**

..............................................................................................................................................

(v) இந்த விளையாட்டுகளை விளையாடுவதிலிருந்து மாணவர்கள் கற்றுக்கொண்ட இரண்டு முக்கிய விஷயங்கள் என்ன?

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(vi) இந்த விளையாட்டுகளை மாணவர்கள் அனுபவித்ததன் ஆதாரங்களிலிருந்து இரண்டை குறிப்பிடுக

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (b) விவாதம்: பள்ளிச் சீருடையின் செயல்திறன் குறித்து காளிமுத்துக்கும் காவியராசிக்கும் இடையிலான விவாதத்தைப் படியுங்கள். தமிழில் பதிலளிக்கவும்.

மாணவர்கள் தங்கள் சீருடையில் பள்ளிக்கு வரத் தேவையில்லாத ஒரு பள்ளியில் படிக்கும் காளிமுத்து மற்றும் அவரது உறவினர் காவியராசி பள்ளி முழுப் பள்ளிச் சீருடையை அணிய வேண்டும் என்று கோருகிறது.

காளிமுத்து:

பள்ளிச் சீருடை அணிவது பள்ளிகளில் சமத்துவத்தை உறுதிப்படுத்த உதவுகிறது என்று காளிமுத்து கூறுகிறார். பள்ளிச் சீருடை மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவுகிறது. ஆசிரியர்கள் மாணவர்களை சரிபார்க்க வேண்டிய தேவையை இது குறைக்க உதவுகிறது. சிறுமியின் ஓரங்கள் மிகக் குறுகியதாக உள்ளதா இல்லையா, மற்றும் சிறுவர்கள் விளையாட்டு காலணிகள் அணிந்து வந்துள்ளனரா இல்லையா என்பதை தீர்மானிப்பது போன்ற தேவைகளையோ குறைக்கின்றது, இது மாணவர்களுக்கான கவனச்சிதறல்களைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த சமூக உணர்வைத் தருவதுடன் பள்ளிக்குச் சொந்தமில்லாதவர்களை வளாகத்தில் அனுமதிக்காது போன்ற அங்கீகரிப்பு விதிகளையும் உறுதி செய்கிறது.

கவியரசி:

சீருடைகள் தங்கள் கருத்துச் சுதந்திரத்தை மீறுகிற ஒன்றாகத் திகழ்கின்றது என ஒரு சில மாணவர்கள் வாதிடுவதாக கவியரசி கூறுகிறார். நவீன தலைமுறையில் உள்ள மாணவர்கள் உடல் துளைத்தல் போன்ற பிற வழிகளில் தங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்தத் தேர்வு செய்யலாம், இது கட்டுப்படுத்தக் கடினமாக உள்ளது. இது மட்டுமல்லாது வேறு சில பெற்றோர்கள் செலவு பற்றிய கவலைகளை எழுப்புகிறார்கள் மற்றும் பருவங்கள் மாறும் சீருடை தேவைகள், விளையாட்டுச் சீருடைத் தேவைகளின் அடிப்படையில் பல்வேறு வகையான பள்ளிச் சீருடைகளை வழங்க வேண்டும். இதனுடன் சேர்ந்து சீருடைகள் ஒரு பள்ளியைச் சேர்ந்த மாணவர்களையும் தனிமைப்படுத்துகின்றன. சில குடும்பங்கள் தங்களது சொந்தத்தைத் தவிர வேறு எந்த மத ஆடைகளிலும் தலையிடக்கூடும் என்று அஞ்சக்கூடும். பள்ளிச் சீருடைகளுக்கான ஒரு புதிய கொள்கை நேரம் எடுக்கும் மற்றும் செயல்படுத்தக் கடினமாக இருக்கும் எனவும் ஆசிரியர்களால் அஞ்சப்படுகிறது.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(i) காளிமுத்துவின் கருத்துக்களை சுருக்கமாகக் கூறுங்கள்:

- மாணவர்கள் பள்ளிச் சீருடை அணிவதின் ஒரு நன்மையை கொடுங்கள்

**(1)**

- சீருடை அணிவது ஆசிரியர்களின் நேரத்தை எவ்வாறு மிச்சப்படுத்துகிறது.

**(1)**

..........................................................................................................................................

..........................................................................................................................................

(ii) கவியரசியின் கருத்துக்களை சுருக்கமாகக் கூறுங்கள்:

- சீருடை அணிவதினால் மாணவர் மனப்பான்மை எவ்வாறு மாறும்.

**(1)**

- சீருடை அணிவதை குறித்து பெற்றோரின் கருத்துக்கள்.

**(1)**

..........................................................................................................................................

..........................................................................................................................................

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION B: WRITING

Answer Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** "எனக்கு மிகவும் பிடித்த உணவு" என்னும் தலைப்பில் தமிழில் கீழ்வரும் சொற்களைப் பயன்படுத்தி 60 முதல் 75 சொற்களுக்குள் கட்டுரை எழுதுக.

**எனக்கு மிகவும் பிடித்த உணவு**

- துரித உணவு
- வீட்டில் சமைத்த உணவு
- உணவுப் பழக்கம்
- ஆரோக்கியமாக இருக்க வழிகள்

**(14)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**





Turn over

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**6** பின்வரும் 3 தலைப்புகளில் ஒன்றைத் தேர்வுசெய்து, 130 முதல் 150 சொற்கள் கொண்ட கட்டுரையை தமிழில் எழுதுக. ஒவ்வொரு தலைப்புகளுக்கும் பயன்படுத்த உப தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

**தெரிவு 1**

**டிஜிட்டல் விளையாட்டுகள்**

(a)



“டிஜிட்டல் அடிப்படையிலான விளையாட்டுகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதவும். அதில் குறிப்பிடப்பட வேண்டியவை:

- டிஜிட்டல் கேம்களின் நன்மைகள் மற்றும் தீமைகள்
- இந்த விளையாட்டுகளை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள்
- இந்த விளையாட்டுகளிலிருந்து வளரக்கூடிய திறன்கள்

**(26)**

**தெரிவு 2**

(b)

உங்களுக்குப் பிடித்த எந்த ஒரு துறையிலிருந்தும், உங்களுக்கு விருப்பமான முன்மாதிரிக்கு ஒரு கடிதம் எழுதுக.

உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட வேண்டியவை:

- அந்த நபர் எப்படி பிரபலமானார்
- உங்கள் தேர்வுக்கான காரணங்கள்
- உங்கள் முன்மாதிரியிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்
- உனது எதிர்காலத் திட்டம்.

**(26)**

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

**தெரிவு 3**

(c) உலகின் வேறு பகுதியிலிருந்து கலாச்சார பரிமாற்றத் திட்டத்திற்கான வேலைவாய்ப்புக்காக, நண்பருக்கு மின்னஞ்சல் எழுதவும்:

- கால அளவும் பரிமாற்றத்தின் நோக்கமும்.
- அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடு
- கலாச்சார நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளின் விவரங்கள்

**(26)**

**Indicate which question you are answering by marking a cross ☒ . If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒ .**

**Question 6(a)** ☐ **Question 6(b)** ☐ **Question 6(c)** ☐

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 6 = 26 marks)**

**TOTAL FOR SECTION B = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

## SECTION C: TRANSLATION INTO TAMIL

**Write your answer in the space provided.**

**7** பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்.

A wide variety of birds are found in India. India, being a huge country, has varied provinces which provide suitable habitat for these birds to survive and thrive. For example, India has dense forests, open landscapes, agricultural lands, cliffs, long beaches, lakes and river sides. These conditions attract birds from all over the world, some visit during breeding seasons and others during winter for migrations. The only exception to this is the birds from the continents of America and Australia which are not found in India.

**(20)**

**(Total for Question 7 = 20 marks)**

**TOTAL FOR SECTION C = 20 MARKS**
**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

BLANK PAGE

**Question 2**
© hadynyah/Getty Images
© hadynyah/Getty Images
© hadynyah/Getty Images

**Question 6**
© yacobchuk/Getty Images



P 6 2 0 1 4 R A 0 2 0 2 0

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA